March 1967 there has been a vacuum. Government is continuing. It is a continuous process. Officials are there continuously and the Hon. Minister is also having all records at his disposal. So, cannot the Hon. Minister tell categorically that robberies had taken place and they had taken action or robberies had not taken place and so action did not arise ?

THE HON. THIRU SI. PA. ADITANAR : Whether robberies have taken place or not is a matter of opinion; when an hon. Member mentioned that co-operative societies are co-operative robberies I categorically denied that charge. After we took over, we have been devoting careful attention and if any such case had been brought to light, we have not spared them.

DR. H. V. HANDE : Shall we take that robberies had taken place or not ?

THE HON. THIRU SI. PA. ADITANAR : That is a matter of opinion.

THIRUMATHI JOTHI VENCATACHELLUM : If I had understood the supplementary question of the hon. Member Thiru M. A. Latheef correctly he did not refer to any period, 1967 or anything like that, as far as co-operative robberies are concerned. So there is no point in arguing on this question any more.

பேராவூரணியில் டிராக்டர் வாடகை நிலையம்

* 43. வினா.—திரு. குழ. செல்லையா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ). பேராவூரணியில் டிராக்டர் வாடகை நிலையம் அமைக்கும் உத்தேசம் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

Electricity tariffs for industries

* 29 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(*a*) the electricity tariffs for the large and heavy industries in the State for the periods 1968–69, 1969–70, 1970–71 ; and

(*b*) how do these tariffs compare with those obtaining in other States?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (இ) விவர அறிக்கை ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

@ 284-288-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

DR. H. V. HANDE : From the details placed before the House we find that practically Tamil Nadu is the highest so far as tariff is concerned. May I know from the Hon. Minister what steps have been taken to reduce the operation cost and how cost of production could be reduced ? It is as high as 15.2 in Tamil Nadu. It ranges from 4.9 to 11.99 in other States. Of course, I know the difficulties of operation. If you subsidise it, it means there is again loss. May I know whether steps have been taken to see that cost of production has been properly gone into, and action taken by Government to see that it is properly rectified, so that there will not be dispersal of industries from our State to other States ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மின் கட்டணம் சற்று அதிகமாக இருப்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. ஒன்று நம் மாநிலத்திற்குத் தேவையான அளவு மின் உற்பத்தி நம்மிடம் இல்லை. பிற மாநிலங்களிலிருந்து மின்சாரத்தைப் பெறுகிறோம். இதன் காரணமாகவும் அதிகச் செலவாகிறது. இதைக் குறைப்பதற்கான வழிமுறைகளைக் காண்கிறபோது, மேலும் உற்பத்தியைப் பெருக்க பதினொரு திட்டங்களைத் தயாரித்து, மத்திய அரசு இவற்றுக்கான அனுமதியைக் கொடுத்தால், விவசாயப் பெருமக்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் விநியோகிக்கலாம் என்பதாக ஒரு பத்தாண்டுக் கால திட்டத்தைத் தீட்டி அனுப்ப இருக்கிறோம். இப்போது இருக்கின்ற விகிதத்திலே கூட சில மாறுதல்களைச் செய்யலாமென்று, ஏற்கெனவே அரசினால் அமைக்கப்பட்ட டாக்டர் நடராஜன் அவர்கள் தலைமையினால் ஆன சப் கமிட்டி பரிந்துரை ஒன்றை வழங்கி இருக்கிறது. அது ஒர்க்கிங் குரூப்புக்கு வந்து, பரிசீலனை செய்யப்படும். இந்த ஒர்க்கிங் குரூப் என்ன முடிவு செய்கிறதோ, அதை இந்த அவைக்கு அறிவிக்கத் தயாராக இருக்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : May I know whether there are very large arrears to be collected from industrial establishments by the Electricity Board and whether, because of these arrears, the Electricity Board has disconnected supply of electricity to factories ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அதற்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும். மின்சாரக் கட்டணத்தைக் கட்டாமல் பாக்கி போட்டு விடுகிறவர்களுக்கு சட்டத்தின்படி அதிகாரிகளே டிஸ்கனெக்ட் செய்கிறார்கள். தனிப்பட்ட முறையில் எதுவும் செய்வதில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : இங்கு கொடுத்திருக்கக்கூடிய குறிப்பில் 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ம் தேதி முதற்கொண்டு இந்த விகிதத்தில் வசூலிக்கப்படுகிறது என்று அறிகிறபோதே இதுவும் கூட 11.99 என்பதாக அறிக்கை மூலமாக அறிகிறேன். இதைவிட ஆந்திரப் பிரதேசம் ஒன்றில்தான் அதிகமாக வசூலிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இந்தக் கேள்வியிலே பெரிய தொழிற்சாலைக்கு வசூலிக்கப்படுகிற கட்டணம் கேட்கப்படுகிறது. பெரிய தொழிற்சாலைக்கு இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்தியும். சிறிய தொழிற்சாலைகளுக்குக் குறைத்தும், விவசாயிகளுக்குக் குறைத்தும் விநியோகிக்க அரசு முயலுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இப்போது கூட பெரிய தொழிற்சாலை, சிறிய தொழிற்சாலை என்று பார்ப்பதில்லை. பல்க்காக பவர் கன்ஸ்யூமிங் இன்டென்சிவ் இன்டஸ்ட்ரிகளுக்கு—அவர்கள் இந்தப் பவரை ரா மெட்டீரியல் போல உபயோகப்படுத்துவதால் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. எம். சுரேந்திரன் : மேட்டூர் அலுமினியம் பாக்டரி போன்ற பெரிய தொழிற்சாலைகளுக்குக் குறைந்த விகிதத்தில் மின்சாரத்தை வழங்குவதன் மூலம், மின்சார வாரியம் மக்கள் பணத்தினால் உருவாக்கப்பட்டிருக்கிறது. தனி நபர்கள் அதிகமாக லாபத்தைச் சம்பாதிக்க இதைப் பயன்படுத்தலாமா? இதைத் தவிர்க்க இவர்களுக்கும் கட்டணத்தை உயர்த்தி இப்போது அதிகமாக விதிக்கப்படுகிறவர்களுக்குக் குறைக்க அரசு தயாராய் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முன்பே அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல சிறிய தொழிற்சாலை—பெரிய தொழிற்சாலை என்கிற பாகுபாடின்றி—மின்சாரத்தையே ரா மெட்டீரியல் போல அதிகமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டிய—பவர் கன்ஸ்யூமிங் இன்டென்சிவ் இன்டஸ்ட்ரிகளுக்கு—ஊக்கம் அளிக்க வேண்டும் என்கிற முறையில் குறைந்த விலையில் கொடுக்கப்படுகிறது. இதற்கு முக்கியமான காரணமே நம் மாநிலத்தில் தொழில்கள் வளரவேண்டும்—இங்கே உற்பத்தி செய்யப்படுவது—மற்ற மாநிலங்களில் உற்பத்தி செய்யப்படுவதோடு—காஸ்ட் ஆப் ப்ரொடெக்ஷனில் சரியாக இருந்தால் தான் பொது மார்க்கெட்டில் நம்முடைய மாநில சரக்குகள் பாதிக்கப்படாமல் இருக்கும்—அப்போதுதான் இங்கேயும் தொழில்கள் வளரும் என்கிற அடிப்படையில் கொடுக்கப்படுகிறது. இங்கே உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களின் விற்பனை மூலம் விற்பனை வரியும் அதிகமாகக் கிடைக்கிறது. இவை எல்லாவற்றையும் பரிசீலித்துத்தான் வொர்க்கிங் கமிட்டி—மற்ற மாநிலங்களோடு போட்டியிட்டு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்த விகிதத்தை நிர்ணயித்திருக்கிறது.

THIRU R. PONNAPPA NADAR : Sir, may I know from the Hon. Minister whether there is any special concession shown to the aluminium industries and if it is given, what are the reasons therefor ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1967-க்கு முன்னாலேயே அந்தத் தொழிற்சாலை துவங்கப்பட்டிருக்கிறது. வெளிநாட்டாரோடும் அந்தத் தொழிற்சாலையை இங்கே ஆரம்பிப்பதற்கு காரணமாக இருந்தவர்களோடும் அரசாங்கம் செய்துகொண்ட உடன்பாட்டின்படிதான் மின்சாரக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அந்தத் தொழிற்சாலையின் உற்பத்தியை விஸ்தரிக்க இப்போது திட்டமிட்டிருக்கிறார்கள். அதற்கு இப்போது ஒரு புதிய ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்தக் கேள்வி ஹெவி அண்ட் லார்ஜ் இன்டஸ்ட்ரிகளைப் பொறுத்தது. அலுமினியம் பிளான்ட் போன்ற பெரிய தொழிற்சாலைகளுக்கு அதிகக் கட்டணம் வசூலித்து, சிறிய தொழிற்சாலைகளுக்குக் குறைந்த கட்டணம் வசூலிக்கக்கூடிய முறையில் அரசு எதாவது ஆலோசனை செய்து வருகிறதா என்று கேட்டேன். அதற்குப் பதிலளிக்க வேண்டுமென்று மீண்டும் அந்தக் கேள்வியையே வற்புறுத்துகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: சிறிய தொழிற்சாலைகளுக்கு ஊக்கம் தரவேண்டும் என்பதை நான் ஆதரிக்கிறேன். ஆனால் இங்கே பெரிய தொழிற்சாலைக்குச் சலுகை கொடுப்பது என்பதல்ல.

Power itself becomes raw material, because of the power intensive programmes in those industries. That is why we are giving the concession as a policy to these industries. If we consider about small industries also, we will do it so far as it is possible after the Working Committee submits its report.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, இங்கு கொடுக்கப்பட்டிருக்கிற பட்டியலிலே தமிழ்நாட்டில் அதிக மின்சாரக் கட்டணம் வசூலிப்பது போன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. கேட்கப்பட்ட கேள்வி, ஃபெர்ட்டிலைசர், அலுமினியம் போன்ற பெரிய தொழிற்சாலைகளுக்கு என்ன விகிதத்தில் மின்சாரக் கட்டணம் வழங்கப்படுகிறது என்பதாகும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: குறைத்தும் கொடுக்கப்படுகிறது என்றார்கள். மற்ற மாநிலங்களை விட அதிகமாக இருக்கிறதே என்றும் கேட்டார்கள். இரண்டுக்கும்தான் பதிலளிக்கப்பட்டிருக்கிறது. பெரிய தொழிற்சாலை என்கிறபோது பவர் கன்ஸ்யூமிங் இன்டென்சிங் இன்டஸ்ரிகளுக்குத்தான் செய்து கொள்ளப்பட்ட நெகோசியேஷன் பிரகாரம் அளிக்கப்படுகிறது. இதனால் மிகுந்த அளவு நஷ்டம் இல்லை என்பதையும் உணர வேண்டும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: கனரகத் தொழிற்சாலைகளுக்கு மின்சாரக் கட்டணம் மிகக் குறைந்திருக்கும் நேரத்தில் வர்த்தக ஸ்தாபனங்கள் விளக்கு அலங்காரம் செய்ய அனுமதி கேட்கிறபோது அவர்களுக்கு ஒரு யூனிட் ஒரு ரூபாய் என்ற அளவுக்கு வழங்கப்படுவது உண்மையா? என் வணிகர்களுக்கு மட்டும் தண்டனையாக இதுபோன்று விதிக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: ஏற்கனவே கட்டண விகிதம் எந்த முறையில் விதிக்கப்பட வேண்டும் என்பது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதன்படிதான் விதித்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். தனியாக கேள்வி போட்டால் விபரம் அறிந்து சொல்ல முடியும்.

DR. H. V. HANDE: The Minister in his reply was saying that he has appointed a Committee to go into the rates and other things with regard to the industries. My fundamental question was, what exactly is the reason for the high tariff? Even for hydel-power—the Minister was saying if it is more hydel power it will be better—in the statement itself it is 11.99, that is nearly 12. So, there must be something wrong at the point of production. Will the Minister come forward to appoint a small Committee to go into the cost of production and why, as far as the tariff of electricity is concerned, we are unable to favourably compare ourselves with the other States, so that a proper reduction of the tariff can be done without affecting the tax-payers' money?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தையும் ஒர்க்கிங் கமிட்டி கருத்தில் கொண்டு பரிசீலனை செய்யும். ஹைடல் பவர் அதிகமாக இருப்பதற்கு பல்வேறு காரணங்கள் குறிப்பாக பருவ

மழை இல்லாவிட்டால் அதன் உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. அப்போது தெர்மல் பவர் கொடுக்க வேண்டிய நிலையும் வருகிறது. இதையெல்லாம் மனதில் வைத்து இந்த கமிட்டி பரிசீலனை செய்யும்.

திரு. எம். சுரேந்திரன்: அமைச்சரவர்கள் பதில் கூறுகிறபோது மின்சாரத்தையே மூலப்பொருளாக பயன்படுத்துகிற தொழிற்சாலைகளுக்கு குறைந்த கட்டணத்தில் கொடுப்பதாக ஒப்பந்தம் இருக்கிறது என்று சொன்னார்கள். இன்றைக்கு மிக லாபகரமாக நடக்கிற தனியார் துறை தொழில்களையே பொதுத்துறைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சோஸலிசம் பேசுகின்ற நேரத்தில் பொதுப்பணத்தை எடுத்து தனியார் லாபமடையக்கூடிய நிலையை உண்டாக்குகிறோமே, இந்த முரண்பாடுகளை மாற்ற அரசாங்கம் என்ன செய்ய இருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதில் ஒன்றும் முரண்பாடு இருப்பதாகத் தெரியவில்லை. இப்படி ஒரு சலுகை அளிக்கப்படாது போனால் தொழிற்சாலைகளை மூடவேண்டியதாக இருக்குமே தவிர, வேறு வழியில்லை. யாரோ தனி நபர் லாபம் சம்பாதிப்பது என்பது இல்லை. லாபத்தில் நமக்கும் பங்கு உண்டு, நமக்கும் அந்த ஸ்தாபனத்தில் உரிமை உண்டு.

காட்டு எருமைகள் வளர்ப்பு

* 44 வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டுக் காடுகளில் "காட்டு எருமை"களை வளர்க்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:

(அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

Joint Directors for State Transport Department

* 45 Q.—THIRU E. S. THYAGARAJAN: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(*a*) whether there is any proposal to appoint regional Joint Directors in the State Transport Department to speed up the efficiency in the administration; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) & (இ): தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறையின் நிர்வாகத்தை சீரமைத்துத் திறன் மிக்கதாய்ச் செய்யும் நோக்குடன், அரசு இம்மாநிலம் முழுவதும் கீழ்க்காணும் நான்கு வட்டாரங்களாகப் பிரிக்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது.

(1) கன்னியாகுமரி வட்டாரம்: இவ்வட்டாரம் நாகர் கோயிலில் தலைமை யிடத்துடன் கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களைக் கொண்டிருக்கும்.